**(Under Section.173 BNSS)**

# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8102166

1. District : மாவட்டம் கோவை மாவட்டம் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 8/2024/AC/CB | Date: நாள் 24.9.2024.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 19.9.2024 - 10.45hrs
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 23.9.2024 - 14.15hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24/9/2024 | Time : நேரம் 12.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD vol II | Time : நேரம் 12.00hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 7 km. தென்கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மாவட்ட கருவூல அலுவலர் அலுவலகம் மாவட்ட ஆட்சியர் வளாகம், கோவை.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. சிசில் ஆரோக்கியம் அலெக்சாண்டர் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பீட்டர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 60yrs | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – | Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
   (f) Occupation : தொழில் உடற்கல்வி ஆசிரியர் (ஓய்வு) | (g) Address : முகவரி D.No. 1/5B வெங்கட்ரமணா நகர், ராஜேந்திராபுரம் ரோடு, போத்தனூர், கோவை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. ராஜா, கண்காணிப்பாளர், மாவட்ட கருவூல அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், கோவை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

* GCP 240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Gyth 24.9.24

P. [signature] 24/9/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.09.2024 - 13.30 hrs

Name: பெயர் P. கலைசெல்வி.
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ..........
அ.ம.க. காவல் நிலையம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2024/AC/CB, u/s.7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

24.09.2024-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R. கௌசல்யா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது P.சிரில் ஆரோக்கியம் அலெக்சாண்டர், த/பெ.பீட்டர் கதவு எண் 1/5B, வெங்கட்ரமணா நகர், நஞ்சுண்டாபுரம் ரோடு, போத்தனூர், கோவை. 641023. என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான புகார் ஒன்றினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புனர் P.சிரில் ஆரோக்கியம் அலெக்சாண்டர், த/பெ.பீட்டர் கதவு எண் 1/5B, வெங்கட்ரமணா நகர், நஞ்சுண்டாபுரம் ரோடு, போத்தனூர், கோவை. 641023. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோவை. அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கோவையில் உள்ள கிக்கானி மேல்நிலைப்பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து கடந்த 31.05.24 ஆம் தேதி பணிமூப்பின் காரணமாக பணி ஓய்வு பெற்றேன். நான் எனது பணி ஓய்வூதிய பலன்கள் பெற நான் பணிபுரிந்த மேற்படி பள்ளியின் மூலமாக விண்ணப்பித்தேன். ஓய்வூதியபலன்கள் தொடர்பான அனைத்து வேலைகளையும் மேற்படி பள்ளியில் பணிபுரியும் கிளர்க் அச்சுதன் அவர்கள் கவனித்து வருகிறார். எனது விண்ணப்பத்தையும் அவர்தான் கவனித்து வருகிறார். எனக்கு சென்னை Accountant General அலுவலகத்திலிருந்து கடந்த ஜீன் மாத கடைசியில் தபால் மூலம் ஓய்வூதிய பலன்கள் தொடர்பான விவரம் குறித்த கடிதமும், Intimation of Gratuity Authorization கடிதமும் கிடைக்கப்பெற்றேன். நான் மேற்படி கடிதத்துடன் ஜீலை மாத துவக்கத்தில் நான் பணிபுரிந்த பள்ளிக்கு சென்று மேற்படி கிளர்க் அச்சுதன் அவர்களை சந்தித்து கடிதத்தின் நகல் ஒன்றினை அவரிடம் கொடுத்தேன். அவர் தான் Process செய்துவிட்டு கூப்பிடுவதாக தெரிவித்தார். அதன்பிறகு நிலுவையின்மை சான்றானது எங்கள் பள்ளியின் மூலம் கோவை மாவட்ட கல்வி அலுவலர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன்பிறகு கோவை மாவட்ட கருவூலத்திலிருந்து ஓய்வூதியம் பெற ஆவணங்களுடன் சார்-கருவூல அலுவலகத்தை நேரில் அணுகும்படி கடிதம் கிடைக்கப்பெற்றது. அதன்பேரில் நான் கிளர்க் அச்சுதன் அவர்களிடம் மேற்படி கடிதம் வந்ததை தெரிவித்து அதற்குண்டான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு

மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்தில் அதற்குண்டான பணிகள் முடிக்கப்பட்டு கடந்த 11.09.24 ஆம் தேதியன்று நானும் கிளர்க் அச்சுதன் அவர்களும் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்தில் கொடுத்த ஆவணங்களுடன் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாவட்ட கருவூலத்திற்கு சென்று Pension மற்றும் Commutation-க்கு உண்டான பிரிவில் அதற்குரிய ஆவணங்களை கொடுத்துவிட்டு Gratuity சம்மந்தமான ஆவணங்களை அதற்குரிய பிரிவில் கொடுத்தோம். அதன்பிறகு நான் 18.09.24 ஆம் தேதி மதியம் சுமார் 1.15 மணியளவில் மேற்படி கருவூலம் சென்று Gratuity தொடர்பான பிரிவில் உள்ள Superintendent அவர்களை நான் நேரில் சந்தித்து எனது Gratuity தொடர்பாக கேட்டபோது, அவரது கம்யூட்டரில் பார்த்துவிட்டு பதிவுகள் முழுவதுமாக இல்லை என கூறி கிளர்க் அச்சுதன் அவர்களுக்கு போன் செய்து கருவூலம் வரும்படி கூறினார். பிறகு என்னிடம் அச்சுதன் வந்தவுடன் அவருடன் சேர்ந்து தன்னை சந்திக்கும் படி சொல்லி அனுப்பினார். நானும் அலுவலகத்தை விட்டு வெளியே வந்து எனது செல்போன் 9486392184 எண்ணிலிருந்து கிளர்க் அச்சுதன் அவர்களின் செல்போன் எண்ணான 9843064515-க்கு தொடர்பு கொண்டு Superintendent அவர்கள் தெரிவித்த விவரங்களை கூறி கருவூலத்திற்கு வருமாறு கூறினேன். அதன்பேரில் அச்சுதன் அவர்களும் அன்றைய தினமே மாலை சுமார் 5.00 மணியளவில் கருவூலத்திற்கு வந்தார். நானும் அச்சுதன் அவர்களுடன் சேர்ந்து கருவூல அலுவலகத்திற்குள் சென்று Gratuity தொடர்பாக Superintendent அவர்களை சந்தித்தோம். அவர் அச்சுதன் அவர்களிடம் விவரங்களை கேட்டு கணினியில் பதிவு செய்தார். அதன்பிறகு 19.09.24 ஆம் தேதியன்று காலை சுமார் 9.15 மணியளவில் எனது செல்போனுக்கு ஓய்வூதியம் சம்மந்தமாக குருஞ்செய்தி வந்தது. அதில் ஓய்வூதியம் சம்மந்தமாக கருவூல அலுவலரை சந்திக்குமாறு இருந்தது. அதன்பேரில் நான் 19.09.24 ஆம் தேதி காலை சுமார் 10.45 மணிக்கு கருவூலத்திற்கு சென்று மேற்படி Superintendent அவர்களை சந்தித்து மேற்படி குருஞ்செய்தி வந்தது தொடர்பாக அவரிடம் காண்பித்த போது அவர் Pension க்குரிய பிரிவில் சென்று கேட்குமாறு கூறினார். மேலும் நான் அவரிடம் எனது Gratuity சம்மந்தமாக கேட்டபோது அவர் அதனை ஏற்பாடு செய்து தர தனக்கு தனியாக பணம் ரூ.5,000/- கேட்டார். நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னால் தர முடியாது என்று கூறியதற்கு இதுவே குறைத்துதான் சொல்லியிருக்கிறேன், பணத்தை ரெடி செய்துவிட்டு வருமாறு சொல்லி என்னை அனுப்பி விட்டார். அதன்

பிறகு நேற்று 23.09.24 ஆம் தேதி மதியம் சுமார் 2.15 மணியளவில் 8778478902 என்ற எண்ணிலிருந்து எனது செல்போன் 9486392184-எண்ணிற்கு கால் வந்தது, நான் அதனை அட்டென்ட் செய்தபோது treasury office–லிருந்து Superintendent ராஜா பேசுவதாக சொன்னார். நான் அவரிடம் எனது Gratuity பணம் தொடர்பாக கேட்டபோது அவர் ஓரிரு நாளில் எனது அக்கவுண்டில் கிரிடிட் ஆகிவிடும் என்று சொல்லி, நான் கேட்ட பணம் என்னானது என்று கேட்டார். அப்போது போன் இணைப்பு கட் ஆகி விட்டது. நான் உடனே எனது செல்போனிலிருந்து Superintendent ராஜா அவர்களின் மேற்படி செல்போன் எண்ணிற்கு மீண்டும் தொடர்பு கொண்டு அவரிடம் பேசிய போது என்னிடம் அவ்வளவு பணம் தற்போது இல்லை, ஓய்வு பெற்றுவிட்டதால் எனக்கு சம்பளமும் இல்லை, ஆதலால் கொஞ்சம் குறைத்து கொள்ளுமாறு கேட்டேன். அதற்கு அவர் ரூ.5,000/-லிருந்து குறைத்து ரூ.2,000/- கொடுக்குமாறு சொன்னார். மேலும் பணத்தை ரெடி செய்துவிட்டு பணத்துடன் நாளை மாலை தன்னை வந்து அலுவலகத்தில் சந்தித்து கொடுக்குமாறு சொல்லி விட்டு போன் கட் செய்துவிட்டார். எனது Gratuity பணத்தை பெற லஞ்சமாக பணம் ரூ.2,000/- கொடுக்க எனக்கு விருப்பமில்லை. ஆதலால் லஞ்சமாக பணம் ரூ.2,000/- கேட்ட மேற்படி கருவூல Superintendent ராஜா மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-(xxxx) 24.09.24 (P.சிரில் ஆரோக்கியம் அலெக்சாண்டர்). Respected Madam, Received the above complaint on 24.09.2024 at 12.00 hrs., conducted discreet enquiry and after getting concurrence from DVAC, Chennai, a case in Coimbatore V&AC Cr.No.8/2024/AC/CB u/s.7 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 24.09.2024 at 12.45 hrs sd/-(xxxx) (R.Kousalya), Inspr V& AC,Cbe, 24.09.2024. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

R. Ka ... 24/9/24.

(R.கௌசல்யா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.